மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஆண்டிபட்டி,

**முன்னிலை: திரு. கபாலீஸ்வரன், B.A., B.L.,**

மாவட்ட உரிமையியல் நீதிபதி, ஆண்டிபட்டி.

2024–ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 6–ம் நாள் வெள்ளிக்கிழமை

இ.ம.எண்.6/2022

in

அ.வ.எண்.62/2017

1) எஸ்.சுமதி
2) எஸ்.குமரன் .... மனுதாரர்கள் / வாதிகள்

–எதிர்–

பவுனம்மாள் .... எதிர்மனுதாரர்/பிரதிவாதி

இந்த மனுவானது கடந்த 16.08.2024 ஆம் தேதி இறுதி விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் **திரு.P.சுப்பிரமணி.,B.A.,B.L.,** அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் **திரு.S.செல்வராஜ்,,B.A.,B.L.,** அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டும், மனு ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டும், நாளது தேதி வரை இந்த நீதிமன்றத்தின் பரிசீலனையில் இருந்து வந்து இன்று வழங்கும்...

## உத்தரவு

1) இ.ம.எண்.3/2021–ல் தாக்கல் செய்யப்பட்ட நீதிமன்ற ஆணையர் அறிக்கையை நீக்கரவு செய்துவிட்டு, வேறு ஒரு நீதிமன்ற ஆணையரை நியமனம் செய்து, மனு சொத்துக்களை பார்வையிட்டு, நில அளவையர் மூலம் அளந்து, சொத்துக்களின் அமைப்பு குறித்தும், இயற்கை தன்மை குறித்தும் மற்றும் சொத்தின் எல்லைகள் குறித்தும் அறிக்கை தாக்கல் செய்ய உத்தரவிடக் கோரி உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 26, விதி 9 மற்றும் பிரிவு 151–ன் கீழ் மனுதாரர்களால் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) **மனுதாரர்கள் தரப்பு மனுவின் சுருக்கம்:** மனுதாரர் இந்த வழக்கு வாதிகளின் பொது அதிகார முகவர் என்றும், எதிர்மனுதாரருக்கு எதிராக விளம்புகை, சுவாதீன ஒப்படைப்பு மற்றும் நிரந்தர உறுத்துக் கட்டளை ஆகிய பரிகாரங்கள் கோரி அசல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், வழக்கில் மனுதாரர்களுக்கு பாத்தியப்பட்ட வழக்குச் சொத்தை அடையாளம் காண நீதிமன்ற ஆணையர் ஒருவரை

நியமனம் செய்து, வட்ட துணை ஆய்வாளர் (நில அளவை) உதவியுடன் வழக்குச் சொத்தை அளந்து, அதன் இயற்கை அமைப்புகளை ஆய்வு செய்து, அறிக்கையும் வரைபடமும் தாக்கல் செய்யக் கோரி மனுதாரர்கள் தரப்பில் இ.ம.எண்.3/2021 ஆக மனு தாக்கல் செய்யப்பட்டது என்றும், அதன் அடிப்படையில் நீதிமன்ற ஆணையர் நியமனம் செய்யப்பட்டு நில அளவையர் உதவியுடன் கிரைய ஆவணங்களில் கண்டபடி மனுதாரர்களின் சொத்துக்களையும் மற்றும் எதிர்மனுதாரர் சொத்துக்களையும் அளந்து அறிக்கை தாக்கல் செய்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது என்றும் கூறப்பட்டுள்ளது.

3) அதனைத் தொடர்ந்து, மேற்படி உத்தரவின் அடிப்படையில் நீதிமன்ற ஆணையர் கடந்த 13.011.2021 ஆம் தேதி இடத்தை பார்வையிட்டார் என்றும், நில அளவையர் அளந்து காட்டிய விபரத்தை குறிப்பிடாமலும், இயற்கை அமைப்புகளில் இருப்பதை சொல்லாமலும், இல்லாததை இருப்பதாக காட்டியும் அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றும், மனுதாரர்கள் தரப்பில் மேற்படி அறிக்கை மற்றும் வரைபடத்திற்கு ஆட்சேபனை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், ஆணையர் நீதிமன்ற உத்தரவுப்படி செயல்படவில்லை என்றும், ஆணையர் அறிக்கையில் உள்ள குறைபாடுகளையும், மனுதாரர்கள் தரப்பு ஆட்சேபனைகளை நீருபிக்க வேண்டும் என்றால், வழக்குச் சொத்தின் இயற்கை அமைப்புகளை நில அளவை வட்ட ஆய்வாளர் உதவியின் மூலம் அளந்து அறிக்கை தாக்கல் செய்ய நீதிமன்ற ஆணையர் ஒருவரை நியமனம் செய்ய வேண்டும் என்றும், அவ்வாறு இல்லாதபட்சத்தில் மனுதாரர்கள் தரப்பு வழக்கை நிரூபிக்க இயலாமல் போய்விடும் என்றும், அவ்வாறு செய்யும்பட்சத்தில் வழக்கில் சாட்சிய விசாரணையும் குறைய வாய்ப்புண்டு என்றும் கூறப்பட்டுள்ளது.

4) **எதிர்மனுதாரர் தரப்பு மனுவின் சுருக்கம்:** எதிர்மனுதாரர், அசல் வழக்கில் பிரதிவாதி என்றும், மனுவில் 2 ஆவது பத்தியில் இ.ம.எண்.3/2021-ல் பிறப்பிக்கப்பட்ட உத்தரவின்படி நீதிமன்ற ஆணையர் செயல்படவில்லை என்று சொல்லியுள்ளது சரியல்ல என்றும், கடந்த 13.011.2021 ஆம் தேதி இடத்தை பார்வையிட்டு நில அளவையர் அளந்து காட்டிய விபரத்தை குறிப்பிடாமலும், இயற்கை அமைப்புகளில் இருப்பதை சொல்லாமலும், இல்லாததை இருப்பதாக காட்டியுள்ளதாகவும் சொல்லியுள்ளது சரியல்ல என்றும், ஆணையர் அறிக்கையில்

உள்ள குறைபாடுகளையும், மனுதாரர்கள் தரப்பு ஆட்சேபனைகளை நிரூபிக்க வேண்டும் என்றால், வழக்குச் சொத்தின் இயற்கை அமைப்புகளை நில அளவை வட்ட ஆய்வாளர் உதவியின் மூலம் அளந்து அறிக்கை தாக்கல் செய்ய நீதிமன்ற ஆணையர் ஒருவரை நியமனம் செய்ய வேண்டும் என்று சொல்லியுள்ளது சட்டப்படி ஏற்புடையதல்ல என்றும் கூறப்பட்டுள்ளது.

5) அதனைத் தொடர்ந்து, மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆணையர் அறிக்கை மீதான ஆட்சேபனைகளும் ஏற்கதக்கதல்ல என்றும், உண்மையில் நில அளவையர் வரைபடத்தில் என்ன அளவுகள் குறிப்பிடபட்டுள்ளதோ, அதே அளவுகள்தான் ஆணையர் வரைபடத்திலும் குறிப்பிடப்பட்டுள்ளதே தவிர மனுதாரர் குறிப்பிட்டுள்ளபடி தவறாக குறிப்பிடப்படவில்லை என்றும், இரண்டு வரைபடங்களையும் பார்த்தாலே மேற்படி விசயம் நன்கு புலனாகும் என்றும், வாதியின் கிரைய பத்திரப்படி கட்டுப்பட்ட நான்கு மாலில் அங்கு இடம் இல்லை என்றும், வாதி குறிப்பிட்டுள்ள நான்குமால்களுக்கும் பிரதிவாதி கிரையம் பெற்ற சொத்தின் நான்கு மால்களுக்கும் தொடர்பே கிடையாது என்ற உண்மை நிலவரம் தெரிந்தவுடன் எதிர்மனுதாரரை வீண் அலைக்கழிப்பு செய்ய வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் நீதிமன்ற ஆணையர் மீது குறை சொல்லியுள்ளார் என்றும், அளவீடு செய்தபோது ஏதேனும் கருத்து இருந்தால் குறிப்பாணை மூலம் நீதிமன்ற ஆணையரிடம் தெரிவித்திருப்பார் என்றும், அவ்வாறு செய்யவில்லை என்றும், எனவே, இந்த மனுவை செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என்றும் கூறப்பட்டுள்ளது.

6) **தீர்வு :** இந்த மனுவானது இ.ம.எண்.3/2021–ல் தாக்கல் செய்யப்பட்ட நீதிமன்ற ஆணையர் அறிக்கையை நீக்கரவு செய்துவிட்டு, வேறு ஒரு நீதிமன்ற ஆணையரை நியமனம் செய்து, மனு சொத்துக்களை பார்வையிட்டு, நில அளவையர் மூலம் அளந்து, சொத்துக்களின் அமைப்பு குறித்தும், இயற்கை தன்மை குறித்தும் மற்றும் சொத்தின் எல்லைகள் குறித்தும் அறிக்கை தாக்கல் செய்ய உத்தரவிடக் கோரி மனுதாரர்களால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அசல் வழக்கானது வழக்குச் சொத்து பொது அதிகார முகவரின் முதல்வர்களான வாதிகளுக்கு பாத்தியப்பட்டது என்று விளம்புகை செய்யக் கோரியும், வழக்குச் சொத்தில் பிரதிவாதி கட்டியுள்ள கட்டிடத்தை

இடித்து அப்புறப்படுத்தி வாதிகள் வசம் சுவாதீனம் ஒப்படைக்க கோரியும், கடந்த 12.07.2017 ஆம் தேதி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

7) கடந்த 03.02.2021 ஆம் தேதி எதிர்மனுதாரர் தரப்பில் எதிர் வழக்குரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. கடந்த 11.04.2022 ஆம் தேதி எழுவினாக்கள் வனையப்பட்டுள்ளன. கடந்த 17.03.2021 ஆம் தேதி நீதிமன்ற ஆணையர் நியமனம் கோரி மனுதாரர்கள் தரப்பில் இ.ம.எண்.03/2022 ஆக மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி மனுவின் அடிப்படையில், நீதிமன்ற ஆணையர் நியமனம் செய்யப்பட்டு, அவர் வழக்குச் சொத்துக்களை பார்வையிட்டு கடந்த 22.03.2022 ஆம் தேதி வரைபடத்துடன் கூடிய அறிக்கை தாக்கல் செய்துள்ளார். மேற்படி நீதிமன்ற ஆணையர் அறிக்கையில் மனுதாரர்கள் தரப்பில் ஆட்சேபனை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. கடந்த 01.06.2022 ஆம் தேதி சாட்சியத்திற்காக அசல் வழக்கானது பட்டியலிடப்பட்டபோது, ஏற்கனவே தாக்கல் செய்யப்பட்ட நீதிமன்ற ஆணையர் அறிக்கையை நீக்கரவு செய்துவிட்டு, வேறு ஒரு நீதிமன்ற ஆணையரை நியமனம் செய்து, மனு சொத்துக்களை பார்வையிட்டு மீண்டும் அறிக்கை அளிக்க உத்தரவிடக் கோரி இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

8) மனுதாரர் தரப்பில், நீதிமன்ற ஆணையர் இ.ம.எண்.03/2022–ல் பிறப்பிக்கப்பட்ட உத்தரவுப்படி செயல்படவில்லை என்றும், ஆணையர் அறிக்கையில் உள்ள குறைபாடுகளையும், மனுதாரர்கள் தரப்பு ஆட்சேபனைகளை நீருபிக்க வேண்டும் என்றால், வழக்குச் சொத்தின் இயற்கை அமைப்புகளை நில அளவை வட்ட ஆய்வாளர் உதவியின் மூலம் அளந்து அறிக்கை தாக்கல் செய்ய நீதிமன்ற ஆணையர் ஒருவரை நியமனம் செய்ய வேண்டும் என்றும், அவ்வாறு இல்லாதபட்சத்தில் மனுதாரர்கள் தரப்பு வழக்கை நிரூபிக்க இயலாமல் போய்விடும் என்றும் 2009 (2) CTC 208 மற்றும் 2016 (6) CTC 66 ஆகிய வழக்குகளை மேற்கோள்காட்டி வாதிடப்பட்டது. ஆனால், எதிர்மனுதாரர் தரப்பில் நீதிமன்ற ஆணையர் அவருக்கு வழங்கப்பட்ட பணியை சரியாக செய்துள்ளார் என்றும், மனுதாரர்களுக்கு ஆதரவாக அறிக்கை இல்லை என்பதால் மீண்டும் நீதிமன்ற ஆணையர் நியமனம் கோரி இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும் வாதிடப்பட்டது.

9) மனுதாரர்கள் தரப்பில் மேற்கோள் காட்டப்பட்ட 2009 (2) CTC 208 இந்த

வழக்கில் மாண்பமை சென்னை உயர் நீதிமன்றம் appointing Second Advocate Commissioner before reocrding dissatisfaction of the report submitted is definitely in violation of Order 26 Rule 10 (3) and 12, C.P.C. and the Court has no Jurisdiction to appoint a second Commissioner before setting aside the report already submitted என்று கூறியுள்ளது. எனவே, இரண்டாவது நீதிமன்ற ஆணையர் நியமனம் செய்யும் முன்பாக முதலில் தாக்கல் செய்யப்பட்ட நீதிமன்ற ஆணையர் அறிக்கையைப் பொறுத்து, மேற்படி அறிக்கை இருதரப்பினருக்கும் இடையே உள்ள பிரச்சனையை முழுமையாக தீர்வு காண உதவும் வகையில் இல்லை என்று நிரூபணம் செய்யும்பட்சத்தில், அந்த அறிக்கையை நீக்கரவு செய்து உத்தரவிட வேண்டும். ஆனால் இந்த வழக்கில் அவ்வாறு நிரூபணம் செய்யப்படவோ, முதலில் தாக்கல் செய்யப்பட்ட நீதிமன்ற ஆணையர் அறிக்கை நீக்கரவு செய்யப்படவோ இல்லை. எனவே, மேற்படி வழக்கின் வழிகாட்டுதல் இந்த வழக்கின் பொருண்மைகளுக்கு பொருந்தாது.

10) அதேபோல், மனுதாரர்கள் தரப்பில் மேற்கோள்காட்டப்பட்ட மற்றொரு வழக்கான 2016 (6) CTC 66 என்ற வழக்கில் மாண்பமை சென்னை உயர் நீதிமன்றம் However, in the instant case on hand, the claim of the Petitoners for re-issue of Commisioner's Warrant appearas to be bona fide since it is only in regard to the proper identification and measurement of the Suit property as both the Petitioners and Respondent happended to be the neighbours and claiming rights over a portion of the property. In the absence of proper measurement and identification of the Suit property. The Trial Court may not be able to resolve the issue and give a quietus to the dispute between the parties என்று கூறியுள்ளது. ஆனால், மேற்படி வழக்கின் பொருண்மை, இந்த வழக்கின் பொருண்மைக்கு பொருந்தாது.

11) ஏனெனில், மேற்படி வழக்கில் ஏற்கனவே நியமனம் செய்யப்பட்ட நீதிமன்ற ஆணையர் வழக்குச் சொத்தின் அமைப்பையும், எல்லை கற்களையும் முறையாக அடையாளம் காணவில்லை என்பது உறுதிப்படுத்தப்பட்டு, அதன் அடிப்படையில், மீண்டும் நீதிமன்ற ஆணையர் நியமனம் செய்யப்பட்டுள்ளார். ஆனால் இந்த வழக்கில் அவ்வாறு நீதிமன்ற ஆணையர் வழக்குச் சொத்தின் அமைப்பையும், எல்லை கற்களையும் முறையாக அடையாளம் காணவில்லை என்பது

உறுதிப்படுத்தப்படவில்லை. மனுதாரர்கள் மனுவில், நில அளவையர் அளந்து காட்டிய விபரத்தை குறிப்பிடாமலும், இயற்கை அமைப்புகளில் இருப்பதை சொல்லாமலும், இல்லாததை இருப்பதாக காட்டியும் நீதிமன்ற ஆணையர் அறிக்கை தாக்கல் செய்துள்ளதாக கூறியிருந்தாலும், அதனை உறுதிப்படுத்தும் வகையில் எவ்வித சாட்சிய, சான்றாவணங்களையும் முன்னிலைப்படுத்தவில்லை.

12) மேலும், மனுதாரர்கள் நீதிமன்ற ஆணையரை விசாரணை செய்து, நீதிமன்ற ஆணையர் இ.ம.எண்.03/2022–ல் பிறப்பிக்கப்பட்ட உத்தரவுப்படி வழக்குச் சொத்தை அடையாளம் காணவில்லை என்பது மனுதாரர்கள் தரப்பில் உறுதிப்படுத்தப்படவில்லை. ஆணையர் அறிக்கையில் உள்ள குறைபாடுகளையும், மனுதாரர்கள் தரப்பு ஆட்சேபனைகளையும் நீருபிக்க வேண்டும் என்றால், வழக்குச் சொத்தின் இயற்கை அமைப்புகளை நில அளவை வட்ட ஆய்வாளர் உதவியின் மூலம் அளந்து அறிக்கை தாக்கல் செய்ய நீதிமன்ற ஆணையர் ஒருவரை நியமனம் செய்ய வேண்டும் என்று கூறியுள்ளது சட்டப்படி ஏற்புடையதல்ல. ஏனெனில், வழக்குச் சொத்து மனுதாரர்களுக்கு பாத்தியப்பட்டது என்பதை மனுதாரர்களே உரிய முறையில் நிரூபணம் செய்ய வேண்டும். சாட்சியங்களை சேகரிக்க நீதிமன்ற ஆணையர் நியமனம் கோர இயலாது.

13) எனவே, இந்த வழக்கில் இ.ம.எண்.03/2022–ல் நீதிமன்ற ஆணையர் நியமனம் செய்யப்பட்டு, அவர் வழக்குச் சொத்துக்களை பார்வையிட்டு, கடந்த 22.03.2022 ஆம் தேதி வரைபடத்துடன் கூடிய அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்பதை கருத்தில் கொண்டும், நீதிமன்ற ஆணையரை விசாரணை செய்து, நீதிமன்ற ஆணையர் இ.ம.எண்.03/2022–ல் பிறப்பிக்கப்பட்ட உத்தரவுப்படி வழக்குச் சொத்தை அடையாளம் காணவில்லை என்பது மனுதாரர்கள் தரப்பில் நிரூபணம் செய்யப்படவில்லை என்பதை கருத்தில் கொண்டும், மேற்படி நீதிமன்ற ஆணையர் அறிக்கை உரிய முறையில் நீக்கரவு செய்யப்படாத நிலையில், மீண்டும் நீதிமன்ற ஆணையர் நியமனம் இயலாது என்பதை கருத்தில் கொண்டும், மனுவில் எவ்வித நியாயமான காரணங்களும் இந்த நீதிமன்றம் மனநிறைவு கொள்ளும் வகையில் இல்லை என்பதை கருத்தில் கொண்டும் இந்த மனுவை அனுமதித்து உத்தரவிடுவது

நீதியின்பால் உகந்ததாக இருக்காது என்று இந்த நீதிமன்றம் முடிவு செய்கிறது.

இறுதியாக, இந்த மனுவை தள்ளுபடி செய்தும், மனுவின் தன்மையை கருத்தில் கொண்டும் செலவுத் தொகையை தரப்பினர்களே ஏற்கவும் உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவானது என்னால் சுருக்கெழுத்து–தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, பிழை திருத்தம் செய்யப்பட்டு, 2024–ம் வருடம் செப்டம்பர் மாதம் 06–ஆம் நாள் திறந்த நீதிமன்றத்தில் என்னால் அவையறியப் பகரப்பட்டது.

(ஒம்)S.கபாலீஸ்வரன்
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
ஆண்டிபட்டி

**மனுதாரர்கள் தரப்பில் சாட்சிகள் –** இல்லை
**மனுதாரர்கள் தரப்பில் சான்றாவணங்கள் –** இல்லை
**எதிர்மனுதாரர் தரப்பில் சாட்சிகள் –** இல்லை
**எதிர்மனுதாரர் தரப்பில் சான்றாவணங்கள் –** இல்லை

**(ஒம்)S.கபாலீஸ்வரன்**
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
ஆண்டிபட்டி.